# அரசறிவியல்

## பாசிசவாதம்



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education

தேர்ச்சி 5.0: அரசியல் கருத்தியல்களின் இயல்பை இனங்கண்டு நவீன அரசியல் செயன்முறைகள், நிறுவனங்கள் என்பன தொடர்பில் தீர்மானிப்பதற்கு அரசியல் கருத்தியல் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பணிகள் தொடர்பான விளக்கத்தை வெளிப்படுத்துவர்.

தேர்ச்சி மட்டம் 5.5: பாசிசவாத கருத்தியல்களை விளங்கிக் கொள்வர்.



## பாசிசவாதம்

♣ தாராண்மைவாதம் 17 - 18 ஆம் நூற்றாண்டுகளிலும், 19 ஆம் நூற்றாண்டில் சமவுடமைவாதமும் 20 ஆம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதிக்கு உரிமையுடைய கருத்தியல்களே **பாசிசவாதம்** ஆகும்.

♣ முதலாம் மற்றும் இரண்டாம் உலக யுத்தத்திற்கு இடைப்பட்ட காலத்தில் ஓர் தத்துவமாகவும் அரசியல் இயக்கமாகவும் தோற்றம் பெற்றது. இரண்டாம் உலக யுத்தத்தில் இத்தாலி, ஜேர்மனியின் வீழ்ச்சியோடு தோல்வியடைந்தது.

♣ பாசிசம் என்பது Fascio அல்லது Fasci என்ற இத்தாலிய செல்லில் இருந்து பெறப்பட்டதாகும். இதன் அர்த்தம் 'இறுக்கமாகப் பிணைக்கப்பட்ட தடிக்கட்டு' ஆகும்.

♣ இத்தாலியிலும், ஜேர்மனியிலும் பாசிசவாதமானது முதலாளித்துவ, தாராண்மை ஜனநாயகம், சமவுடமைவாதம் மற்றும் கொமுயூனிசவாதங்களுக்கு நேரெதிரான தத்துவமாகவும், அரசியல் இயக்கமாகவும் தோற்றம் பெற்றது.

♣ இத்தாலியிலும், ஜேர்மனியிலும் தோன்றிய பாரிய அரசியல் நெருக்கடி, பொருளாதார மற்றும் சமூ கவீழ்ச்சி காரணமாக பாசிசவாதம், நாசிசவாதம் தோன்றுவதற்கு பின்னணியாக அமைந்தது.

♣ ஜேர்மனிய நாசிசவாத ஆட்சியாளரான அடொல்ப் ஹிட்லர் 1925-26 களில் அரசியல் சிறை கைதியாக இருந்த போது வெளியிட்ட 'எனது போராட்டம்' என்ற நூலின் ஊடாகவும் இத்தாலிய பாசிசவாத தலைவர் பெனிட்டோ முசோலினி வெளியிட்ட கருத்துக்களின் ஊடாக பாசிசவாத சிந்தனைகளை அறியமுடிகின்றது.

தொகுப்பு :- திரு.ந.பிரதீபன் ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளீர் கல்லூரி, யாழ்ப்பாணம்)

கணினி வடிவமைப்பு :- திரு.வே.நமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பாசிசவாத சிந்தனையினதும் அரசியலினதும் பிரதான பண்புகள்.

### 01 அரசியல் அனைத்தாண்மைவாதம்

அரசு அடிப்படையிலேயே சர்வாதிகாரமானதும், சர்வாதிகாரக் கட்டமைப்பின் மூலம் முழு சமூகத்தையும், அரசியல் முறைமையையும் முழுமையாக கட்டுப்பாட்டிற்கும், ஆதிக்கத்திற்கும் உட்படுத்திக் கொள்வதாகும்.

### 02 அரசிற்கு அடிபணிதல்.

அரசின் அதிகாரத்துவத்தை முழுசமூகமும், சகல பிரஜைகளும் நிபந்தனைகள் மற்றும் கேள்விகள் இன்றி ஏற்றுக்கொள்வதும், சுய விருப்பின்படியே அடிபணிவதுமே ஆகும்.

### 03 தனியாள் சுகந்திரம் இல்லை

பாசிசவாதத்தில் தனியாள் சுகந்திரம் என்பது அரசிற்கும், இனத்திற்கும், தலைவனுக்கும் நிபந்தனையின்றி காட்டும் அடிபணிவின் தன்மையைப் பெறுத்தே காணப்படுகின்றது.

### 04 நாயகர் வழிபாடு (தலைவருக்கு அடிபணிதல்)

சகல பிரஜைகளும், முழு சமூகமும் நிபந்தனையின்றி சுயவிருப்பத்துடன் அடிபணிதல் பாசிசவாதத்தின் விசேட பண்பாகும். புருரர் (Fuhrer) என்ற எண்ணக்கரு ஜேர்மனியின் நாசிசவாதத்தின் நாயகர் வழிபாட்டின் மூலம் வெளியிடப்பட்ட பாசிசவாதத்தின் படைப்பாகும்.

### 05 தீவிரவர்க்கவாதம் / இனவாதம்.

'ஜேர்மன் இனம் ஆரிய இனமாகும்' என்றும், உயர்ந்த இனம் என்றும் உலகின் தலைவிதியை ஜேர்மனிய இனத்தின் தலைவிதியின்படியே தீர்மானிக்கப்படும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே இலட்சக்கணக்கான யூதர்கள் கொல்லப்படுவதை ஜேர்மனிய நாசிசவாதிகள் நியாயப்படுத்தினர்.

தொகுப்பு :- திரு.ந.பிரதீபன் ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளீர் கல்லூரி, யாழ்ப்பாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

06 தீவிர இராணுவவாதம்.

07 வன்முறையையும், தீவிரவாதத்தையும் அரசியல் அதிகார ஊடகமாக பயன்படுத்தல்.

08 அடிப்படை உரிமை, சுதந்திரம் என்பன மறுக்கப்பட்டிருத்தல்.

09 இனசுத்திகரிப்பு (Genocide) பாசிச அரசின் கடமை ஆக்கப்பட்டது.

10 சர்வதேச சட்டத்தினையும், சர்வதேசத்தினையும் எதிர்த்தல் போன்றனவாகும்.

முதலாம் உலகப் போரின் பின் இத்தாலியிலும், ஜேர்மனியிலும் வெளிப்பட்ட பாசிசவாதம் இரண்டாம் உலக மகாயுத்தத்தில் அந்நாடுகள் அடைந்த தோல்வியினால் உத்தியோகபூர்வமாக நிறைவடைந்தன.





பாசிசவாத சிந்தனை இன்று தோல்வியடைந்து காணப்பட்டாலும் அதன் தாக்கத்தை சிறிய குழுக்கள், ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் இன்று காணலாம்.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



**வினா - 01**

பாசிச கருத்திற்கு வித்திட்ட இரண்டு முன்னோடிகளின் பெயர்களைக் குறிப்பிடுக ?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………



**வினா - 02**

பாசிசவாதத்தின் பண்புகள் இரண்டினை குறிப்பிடுக?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………



**வினா - 03**

பாசிசவாத கருத்தியல்கள் பற்றி ஆராய்க?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………



தொகுப்பு :- திரு.ந.பிரதீபன் ஆசிரியர் - அரசறிவியல் (யா/யாழ் இந்து மகளீர் கல்லூரி, யாழ்ப்பாணம்)

கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk